செ.வெ.எண்:05/ஜூன் நாள்:03.06.2016

## இராமநாதபுரம் மாவட்டம்

## உள்ளாட்சி அமைப்புக்களுக்கான தேர்தல் -2016 பூர்வாங்க பணிகள் தொடக்கம்

## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன், இ.ஆ.ப., அவர்கள் ஆய்வு

இராமநாதபுரம் மாவட்டம், திருப்புல்லாணி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் இன்று (03.06.2016) மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள், எதிர்வரும் உள்ளாட்சி அமைப்புக்களுக்கான தேர்தல் -2016ஐ முன்னிட்டு மேற்கொள்ளப்பட்டு வரும் பூர்வாங்க பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

உள்ளாட்சி அமைப்புக்களுக்கான தேர்தல் அக்டோபர் 2016ல் நடைபெற உள்ளதைத் தொடர்ந்து, இத்தேர்தல் தொடர்பான பூர்வாங்க பணிகள் அனைத்து உள்ளாட்சி அமைப்புக்களிலும் தற்போது நடைபெற்று வருகிறது. இதன் தொடக்கப் பணியாக சட்டமன்ற பொதுத் தேர்தல் 2016 இறுதி வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றுள்ள வாக்காளர்களை கிராம ஊராட்சி, பேரூராட்சி, நகராட்சி போன்ற உள்ளாட்சி அமைப்புகளின் வார்டு வாரியாகவும், இனம் வாரியாகவும் பிரிக்கும் பணி தற்போது நடைபெற்று வருகிறது.. இப்பணியை தொடர்புடைய உள்ளாட்சி அமைப்புக்களின் பணியாளர்கள் செய்து வருகிறார்கள்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் 4 நகராட்சிகள், 7 பேரூராட்சிகள் மற்றும் 429 ஊராட்சிகளில் சட்டமன்ற பொதுத் தேர்தல் 2016 இறுதி வாக்காளர் பட்டியலில் உள்ள பெயர்களை வார்டு வாரியாக பிரிக்கும் பணி நடைபெற்று வருகிறது. திருப்புல்லாணி ஊராட்சி ஒன்றியத்தில் இப்பணி நடைபெறுவதை இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் முனைவர் ச. நடராஜன் இன்று ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின் போது மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் திரு ஆ. செல்லத்துரை, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திரு செந்தூர்பாண்டியன் மற்றும் திரு கண்ணதாசன் உள்பட அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**